# சுபீட்சத்தின் 2 ஆவது இதழ் வாங்கிவிட்டீர்களா?

## பிரதிகளுக்கு முந்துங்கள்....

**பத்திரிகை முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்**



# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வெள்ளிக்கிழமை 05.03.2021 supeedsam.com supeedsam@gmail.com







# இலங்கை அரசின் அச்சுறுத்தல்கள் எங்கள் மீது மாத்திரமல்லாமல் எமது குடும்ப ரீதியிலும் இடம்பெற்று வருகின்றன

## தலைவி அ.அமலநாயகி



எங்களை இந்தப் போராட்டங்களில் இருந்து இல்லாமல் செய்வதற்கும், உளவியல் ரீதியானதாக்கத்தைத் தந்து எம்மை அழிப்பதற்குமான முயற்சியில் இலங்கை அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. இலங்கை அரசின் அச்சுறுத்தல்கள் எங்கள் மீது மாத்திரமல்லாமல் எமது குடும்ப ரீதியிலும் இடம்பெற்று வருகின்றன என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க மட்டக்களபப்பு மாவட்டத் தலைவி அ.அமலநாயகி தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

# மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு கட்டங்கட்டமாக நடவடிக்கை





(ஏறாவூர் நிருபர் நாஸர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு கட்டங்கட்டமாக நடவடிக்கை எடுக்கத்தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக வாகனேரி பிரிவிலுள்ள புணானை அணைக்கட்டிலிருந்து பொண்டுகள் சேனை பாலத்தை அண்மித்த ஒன்பது கிலோ மீற்றர் தூரமான இடத்தில் மணல் அகழ்வை உடனடியாக முழுமையாக நிறுத்தப்படவுள்ளது.

மட்டக்களப்பு கிரான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில்

02 ஆம் பக்கத்தில்...



மட்டக்களப்பில் நடைபெறும் இரண்டாம் நாள் உண்ணாவிரதத்தின் போது...

# கொரோனா வைரஸ் தண்ணீரில் பரவாது என்றால் தீவைத் தேடிப் போவது ஏன்?

## எம்.ரி. ஹசன் அலி



( வி.ரி.சகாதேவராஜா)

கொரோனா வைரஸ் தண்ணீரில் பரவாது என்றால் தீவு தேடிப் போவது ஏன்? அதுவும் சகோதர தமிழ்மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் இரணைதீவுக்கு போவது ஏன்? வேண்டுமென்றே கொரோனாவை வைத்து இந்த இரு சமுகங்களையும் மோதவிடுவதற்காக

02 ஆம் பக்கத்தில்...

# ஓட்டமாவடியிலும் கொவிட் சடலம் அடக்கம்?



கொவிட் நோயினால் மரணிக்கும் முஸ்லிம் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு சுகாதார விதிமுறைகளுக்கு அமைய அடக்கம் செய்யலாம் என்று அரசாங்கத்தினால் வர்த்தமானி அறிவித்தல் வெளியானதைத்

02 ஆம் பக்கத்தில்...

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக போட்டியிட மாட்டேன்?

ஜனாதிபதி கோதபய ராஜபக்ஷ அண்மையில் கட்சித் தலைவர்களுடனான சந்திப்பில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக போட்டியிட மாட்டேன் என தெரிவித்துள்ளார். இவ்வாறு சமுகவலைத்தளங்களில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்திவெளியட்டுள்ளது.

தகவல்களின்படி அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு சிறுபான்மை



வாக்குகளைப் பெறக்கூடிய ஒரு வேட்பாளரை நியமிக்குமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அபிவிருத்தி என்பது வீதி மற்றும் கட்டடங்கள் அமைப்பதன் மூலம் காணமுடியாது

## சிவநேசதுரை சந்திரகாந்தன் பா.உ



( ந.குகதர்சன்)

அபிவிருத்தி என்பது வீதி மற்றும் கட்டடங்கள் அமைப்பதன் மூலம் காணமுடியாது எமது சமூகத்தின் வளர்ச்சியில் தான் அபிவிருத்தி தங்கியுள்ளது என்று மாவட்ட

02 ஆம் பக்கத்தில்...

# இனிமேல் ஆற்றுமண் எடுக்கவும் இல்மனைற் அகழவும் தடை!

## திருக்கோவில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்



(வி.ரிசகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேசத்தில் ஆற்றுமண் எடுக்கவும் இல்மனைற் அகழவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

திருக்கோவில் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திருக்கோவில் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்

02 ஆம் பக்கத்தில்...






# மக்கள் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை

## மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களுடனான கலந்துரையாடலில் கிழக்கு ஆளுனர் அநுராதா யஹம்பத் தெரிவிப்பு



( ஹஸ்பர் ஏ ஹலீம்)

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் நேற்று கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களை வரவழைத்து, கிராமத்துடனான உரையாடல் நிகழ்ச்சியின் போது மக்கள் எழுப்பிய அனைத்து பிரச்சினைகளையும் ஜனாதிபதி கோதபாய ராஜபக்சவிடம் தெரியப்படுத்தி தீர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக தெரிவித்தார்.

திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில்

02 ஆம் பக்கத்தில்...






# வவுணதீவில் 12,832 ஏக்கர் விவசாய நிலங்களில் சிறுபோக பயிர்ச்செய்கை





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுனதீவு பிரதேச செயலாளர் பிரிவில் ஆயித்தியமலை, மற்றும் மண்டபத்தடி கமநல சேவை நிலையங்களுக்குட்பட்ட விவசாய நிலங்களில் சிறுபோக பயிற் செய்கை மேற்கொள்வதற்கான ஆரம்பக் கூட்டம் (2021) மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன்

02 ஆம் பக்கத்தில்...




இப்பயிர் செய்கை நிலங்களுக்குத் தேவையான உரங்களை தட்டுப்பாடின்றி பெற்றுக் கொடுக்கத் தேவையான நடவடிக்கைகளை ஏற்கனவே மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும் இம்முறை மானியமாக வழங்கப்படும் இரசாயனப் பசளையுடன் சேர்த்து சேதனப் பசளையும் வழங்கப்படவுள்ளது.

இது தவிர இம்முறை நெற்செய்கை பண்ணவுள்ள விவசாயிகளிடம் தரப்படுத்தப்பட்ட விதை நெற்களை செய்கை பண்ணுமாறும், மறுபயிர் செய்கை பன்னுவதற்கு ஆர்வமூட்டப்பட்டதுடன், விவசாயிகளினது சந்தேகங்களுக்கான விளக்கங்களும் சம்மந்தப்படப்ட அதிகாரிகளால் வழங்கப்பட்டது.

மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலாளர் எஸ். சுதாகர் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி மத்திய நீர்ப்பாசன பணிப்பாளர் என். நாகராத்தினம், விவசாய விரிவாக்கல் திணைக்கள பிரதி பணிப்பாளர் வீ. பேரின்பராசா, மாவட்ட உரச் செயலக உதவிப் பணிப்பாளர் கே.எல். எம். சிராஜுதீன், விவசாய காப்புறுதி சபை உதவிப் பணிப்பாளர் எம்.பாஸ்கரன், மாட்ட விவசாய பணிப்பாளர் கலீல் கரடியனாறு விவசாய பயிற்சி நிலைய விவசாய பிரதிப்பணிப்பாளர் ஆர். சிவனேசன், கமநல சேவைகள் திணைக்கள பிரதி ஆணையாளர் கே. ஜெகநாத் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கால்நடை உத்தியோகத்தர்கள், கமநல சேவைகள் திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

## மக்கள் பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை...

நடைபெற்ற கூட்டத்தில், மாகாண அமைச்சுக்களின் அனைத்து செயலாளர்களையும் வரவழைத்து, திருகோணமலை,, கோமரங்கடவெலவில் உள்ள கிராமத்துடன் பேச்சு நிகழ்ச்சியின் போது எழுந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண மாகாண அமைச்சுக்களின் அனைத்து செயலாளர்களையும் வரவழைத்தார்.

திருகோணமலை வட கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களின் கடுமையான பற்றாக்குறையை தீர்ப்பதற்கான செயல்முறையை விரைவுபடுத்தவும், ஆசிரியர் உதவியாளர்களாக ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான ஆவணங்களை சரி செய்யவும் ஆளுநர் மாகாண கல்வி செயலாளருக்கு இதன் போது அறிவுறுத்தினார்.

இப்பகுதியில் ஆசிரியர் விடுதிகளை நிர்மாணிக்க தேவையான நிதி ஒதுக்கீட்டை விரைவில் வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

விவசாய நடவடிக்கைகளுக்கான நிலங்களை மக்களுக்கு விரைவாக வழங்குவதற்காக பிரதேச செயலகங்கள் மூலம் உரிய அதிகாரிகளுக்கு தேவையான தகவல்களை விரைவாக விரைவுபடுத்த நடவடிக்கை எடுப்பது குறித்தும் விரிவாக பேசப்பட்டது

போருக்கு முன்னர் இப்பகுதியில் வாழ்ந்த மக்களுக்கு நிலங்களை ஒதுக்கீடு செய்வதற்கும், மாற்று நிலங்களை வழங்குவதற்கும், காடுகளைப் பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய அவசியத்தை ஆளுநர் வலியுறுத்தினார். மேலும், மாவட்டத்தில் நச்சுத்தன்மையற்ற விவசாய முறையை விரைவில் அறிமுகப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆளுநர் மாகாண விவசாய அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தினார். மாவட்டத்தில் உள்ள சுகாதார பிரச்சினைகளை அடையாளம் காணவும், அந்த பிரச்சினைகளை விரைவாக தீர்க்க மத்திய அரசுடன் கலந்தாலோசித்து தீர்வு காணவும் ஆளுநர் சுகாதார அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

எதிர்காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் செயல்படுத்தப்படவுள்ள சுற்றுலா தொடர்பான திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

ஆராயப்பட்ட சிக்கல்களைத் தீர்க்க ஒரு மாதத்திற்குள் மற்றொரு முன்னேற்ற ஆய்வுக் கூட்டத்தை நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

## வவுணதீவில் 12,832 ஏக்கர் விவசாய நிலங்களில்...

தலைமையில் நேற்று வவுணதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது இப்பிரதேசத்தில் 12 ஆயிரத்தி 832 ஏக்கர் விவசாய நிலங்களில் சிறுபோக பயிர்ச்செய்கை பண்ணப்படுவதற்கான முன் ஆயத்தங்கள், நீர்ப்பாசனம் மற்றும் மானிய உர விநியோகம் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இவ்விவசாய நிலங்களில் சிறு நீர்ப்பாசன குளங்கள் மூலமாக நீரைப் பெற்றுக் கொள்ளும் 944 ஏக்கர் நிலத்திலும், பிரதான நீர்பாசன வசதியுள்ள 11 ஆயிரத்தி 888 ஏக்கர் நிலத்திலும், மேட்டு நில பயிற்செய்கையானது 31 ஏக்கரிலும் பயிர் செய்கை பண்ணப்படவுள்ளது.

## இனிமேல் ஆற்றுமண் எடுக்கவும் இல்மனைற் அகழவும் தடை!

கூட்டம் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டபிள்யு.டீ.வீரசிங்கவின் தலைமையில் செயலக கேட்போர்கூடத்தில் நேற்று புதன்கிழமை (3) இடம்பெற்றது.

இக்கூட்டத்தில்இ அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் ஆர். கமல்ராஜன் அம்பாறை மாவட்ட பொதுஜன பெரமுன இணைப்பாளர் சாந்தலிங்கம் காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கி.ஜெயசிறில் ஆகியோரின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

மேலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

திருக்கோவில் பிரதேசத்தில் 03 பாரிய நீர்ப்பாசனக்குளங்களும் 75 விவசாயக்குளங்களும் உள்ளன. குறித்த நீர்ப்பாசன விவசாயக்குளங்களை புனரமைப்புச்செய்யப்படவேண்டும் என பிரதேசசெயலாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவை முதலில் 05குளங்களை புனரமைப்புச்செய்வதெனவும் படிப்படியாக ஏனைய குளங்கள் புனரமைப்புச்செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆறுகளைத்தோண்டுவது என்ற போர்வையில் மண் அகழ்வது தடைசெய்யப்படவேண்டும் என்றபிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டு இனிமேல் அப்படியான தேவைவரும்போது உள்ளூர் சமுர்த்தி மக்களைக்கொண்டு அகழ்வதென தீர்மானமாகியது. பிரதேசத்திலுள்ள 25கிலோமீற்றர் விவசாயப்பாதைகள் புனரமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்டது

திருக்கோவில் பிரதேசத்தில் 400மீற்றர் மைதானம் எதுவுமில்லை. எனவே தாண்டியடி பாடசாலையில் அப்படியான மைதானத்தை அமைக்கவேண்டுமென கோரிய போது அதற்கு நடவடிக்கை எடுப்பதென தீர்மானமாகியது. திருக்கோவில் ஆதாரவைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டபோது சுகாதாரஅதிகாரிகளைக்கொண்டு கூட்டம் நடாத்தி தீர்மானமெடுப்பது என முடிவானது.

வட்டமடு மேய்ச்சல் தரைப்பிரச்சினை மீள்குடியேற்ற கிராமங்களுக்கான விவசாய கிணறுகள் குடிநீர் தெரு மின்சார இணைப்பு கிராமிய பாலங்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உள்ளூர் வீதிகள் வடிகான்கள் காஞ்சிரங்குடா நெற்களஞ்சியசாலை புனரமைப்பு வன இலாக பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் யானை வேலி அமைத்தல் காணி காணி ஆவணங்கள் விவசாயம் சுகாதாரம் கல்வி நீர்ப்பாசனம் குளங்கள் புனரமைப்பு வீட்டுத்திட்டம் ஆலய புனரமைப்பு போன்ற பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டு தீர்வுகளும் இதன்போது பெற்றுக்கொடுக்கப்பட்டது.

## ஓட்டமாவடியிலும் கொவிட் சடலம் அடக்கம்?...

தொடர்ந்து கொவிட் நோயினால் மரணிப்பவர்களை நல்லடக்கம் செய்வதற்கான காணியொன்று ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் காகித நகர் கிராம சேவகர் பிரிவில் மஜ்மா நகரில் அடையாளம் காணப்பட்டுள்ளதைத் தொடர்ந்து நேற்று வியாழக்கிழமை அதிகாரிகள் அக்காணியை பார்வையிட்டனர்.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வி.தவராஜா, மட்டக்களப்பு மாவட்ட கொவிட் பொறுப்பாளர் பிரிகேடியர் பிரதீப் கமகே, ஓட்டமாவடி பள்ளிவாசல் நிர்வாகத்தினர், காத்தான்குடி மற்றும் ஏறாவூர் பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவன சம்மேளன பிரதிநிதிகள், ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக அதிகாரிகள், கல்குடா ஜனாஸா நலன்புரி சங்க பிரதிநிதிகள்;, பிரதேச முக்கியஸ்தர்கள் சென்று இடத்தினை பார்வையிட்டனர்.

## அபிவிருத்தி என்பது வீதி மற்றும் கட்டடங்கள் அமைப்பதன் மூலம் காணமுடியாது...

அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் பிரதேச செயலக கேட்பேர் கூடத்தில் இடம் பெற்ற போதே அவர் மேற் சொன்னவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில். கல்வியும் பொருளாதாரமும் வேரில்லை அந்த வகையில் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் இணைந்து செயல்பட வேண்டும் அப்போதுதான் முழுமையான அபிவிருத்தியை பிரதேசத்திற்கான அபிவிருத்தியைகான முடியும். மாவட்டத்தின் வளர்ச்சியில் கோறளைப் பற்று பிரதேச செயலக பிரிவிலுள்ள 12 கிராம பிரிவுகளும் மிகப்பெறிய பங்களிப்பை செய்ய வேண்டிய தேவைப்பாடு உள்ளது மாவட்டத்தின் அபிவிருத்திக்கு பிரதேசத்தில் ஏற்படும் பிரச்சனைகளை குறைப்பதன் மூலமே அபிவிருத்தியை காணமுடியும்.

இங்கு பிரதேசத்தின் சுகாதாரம்,பாதுகாப்பு கல்வி,கலாசாரம் உள்ளிட்ட பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணியினால் முன்மொழியப்பட்டுள்ள பிரதேச ஒருங்கிணைப்பு துணைக்குழு ஸ்தாபித்தல்,2021 ஆம் ஆண்டில் குறித்த பிரதேச செயலாளர் பிரிவில் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ள வேலை திட்டங்களுக்கான அனுமதி வழங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டு மாகாண மத்திய அரசின் வேலைத்திட்டங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், கோறளைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் சோபா ஜெயரஞ்சித், பிரதேச செயலாளர் எஸ்.தனபாலசுந்தரம் உள்ளிட்ட பல்வேறு அரச நிறுவனங்களின் முக்கிய அதிகாரிகள், பொலீசார் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கொரோனா வைரஸ் தண்ணீரில் பரவாது என்றால்...

மூட்டிவிடுகிறார்கள். இது மனிதாபிமானமேஅல்ல. இந்தஅனைத்து பழிபாவங்களையும் அரசுக்கு ஆதரவாக 20க்கு கைதூக்கியவர்கள் பொறுப்பேற்கவேண்டும்.

இவ்வாறு மூத்தஅரசியல்வாதியும் ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம். ரி. ஹசன் அலி தெரிவித்தார்.

ஜனாஸாக்களுடைய எரிப்பு நாட்டில் பாரிய பிரச்சினையாக மாறியிருந்தது.முஸ்லிம்களை பழிவாங்கும்நோக்கில் வேண்டுமென்றே இதனை இழுத்தடித்தார்கள்.பலத்த முயற்சிகள் அழுத்தங்களின்பின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்த ஜனாஸாக்களை இரணைமடுவில் அடக்கம் செய்வதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. என்ற கருத்து வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு பல தரப்பிலிருந்தும் எதிர்ப்புக்கள் எழும்ப ஆரம்பித்திருக்கின்றன. அவை நியாயமானவை.

தமிழ்சகோதரர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பது நியாயமானது. அது அவர்களது உரிமை.பிழையல்ல. சிங்களபிரதேசத்தில் அடக்கம் செய்வதற்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கலாமென்றால் தமிழ்மக்கள் ஏன் எதிர்க்கமுடியாது? என்று கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும்கூறுகையில்:

எமது ஜனாசாக்களை அடக்க நாம் ஏலவே இறக்காமம் சம்மாந்துறை ஓட்டமாவடி என்று பல இடங்களை அடையாளப்படுத்தியிருந்தோம். அதையெல்லாம் விட்டுவிட்டு எங்கோஉள்ள இரணைதீவுக்கு கொண்டு செல்வதன் மர்மம் என்ன? நிபுணர்குழுவே தண்ணீரில் இவ்வைரஸ் பரவாது என்று கூறியிருக்கிறது. அப்படியென்றால் ஏனிந்த சுத்துமாத்து?

முஸ்லிம்களுடைய ஜனாஸாக்களை முஸ்லிம் மக்கள் வாழுகின்ற அவர்களுடைய சொந்த ஊரிலேயே அடக்கம் செய்வதை முஸ்லிம் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். அல்லது அந்தந்த மாவட்டங்களில் உள்ள அடக்குவதற்கு பொருத்தமான இடங்களில் முஸ்லிம் ஜனாசாக்கள் அடக்கம் செய்யப்படுவதையே முஸ்லிம் மக்கள் விரும்புகின்றார்கள். இதனால் தொற்று நோய் பரவுவதாக இருந்தால் முதலில் இங்குள்ள மக்களையே அது பாதிக்கும். இதனை அம்மக்கள் பொறுப்பேற்பதற்கு தயாராக இருக்கின்றனர். அதற்கு ஏற்றாற்போல் அனுமதி கிடைத்தால் முஸ்லிம் மக்கள் மகிழ்ச்சியடைவார்கள்.

## இலங்கை அரசின் அச்சுறுத்தல்கள் எங்கள் மீது மாத்திரமல்லாமல் எமது ...

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தக் கோரி பிரித்தானியாவில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அம்பிகை அம்மணியின் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் மட்டக்களப்பிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் கடந்த பதினொரு வருடங்களாக எமது உறவுகளைத் தேடி அலைகின்றோம். இலங்கை அரசாங்கத்திடம் எந்தவொரு நீதியும் கிடைக்காது என்ற பட்சத்திலேதான் சர்வதேச பொறிமுறையை நாடி நாங்கள் நிற்கின்றோம். தற்போதைய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்ட சர்வதேசப் பொறிமுறையைக் கூட நிராகரித்து ஐநா மனித உரிமைகள் பேரவைத் தீர்மானங்களில் இருந்து விலகியுள்ளது. அந்தவகையிலே நாங்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நாடி நிற்கின்றோம். கடந்த காலங்களில் கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சாட்சியங்களாக நாங்கள் நிற்கின்றோம். ஆனால் 90ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கிழக்கு மாகாணத்தில் நிறையேப் பேர் இருக்கின்றார்கள். வந்தாறுமூலைப் பல்லைக்கழகம், சித்தாண்டி, கொக்கட்டிச்சோலை, சத்துருக்கொண்டான் என்று பல்வேறு பகுதிகளில் கடத்தப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டும், படுகொலை செய்யப்பட்டதற்கும் இதுவரை எந்தவொரு நீதியும் கிடைக்காத பட்சத்திலேயே இந்த இலங்கை அரசின் மீது நம்பிக்கை இல்லாத தன்மை எங்களுக்கு ஏற்பட்டு சர்வதேசத்தை நம்பி நாடிநிற்கின்றோம். தற்போது ஜெனீவா கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதன் ஆரம்பத்தில் வந்த அறிக்கைகள் எமக்குச் சாதகமாகவும், நம்பிக்கைத் தன்மையுடையதாகவும் இருந்த போதிலும் தற்போது வருகின்ற அறிக்கைகளை வைத்துப் பார்க்கும் போது எங்களுக்கு இருக்கின்ற நம்பிக்கைகள் குறைந்த வண்ணம் இருக்கின்றன. ஆனால் இங்கு தமிழர்களின் மீதான அடக்குமுறைகள் இன்னும் குறைந்தபாடில்லை. ஒவ்வொரு விதத்திலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், சிவில் அமைப்புகளுக்கும், ஊடகவியலாளர்களுக்கும், மனித உரிமைச் செயற்பாட்டார்களுக்குமான அச்சுறுத்தல்கள் தலைவிரித்தாடிக் கொண்டேயிருக்கின்றன. ஒரு விதத்தில் இலங்கையில் சட்டமும் அதற்குக் காரணகர்த்தாவாக இருக்கின்றது. எமது தனிமனித உரிமைகளைக் கூடக் கதைக்க முடியாத அளவிற்கு நாங்கள் முடக்கப்பட்ட நிலையில் இருக்கின்றோம். அந்த அடிப்படையில் சர்வதசத்தில் வாழும் மக்களும், சர்வதேச நாடுகளும் எமது பிரச்சினைகளைக் கவனத்திற்கொண்டு எமது உறவுகளை மீட்டு, எமது உரிடிமைகளைப் பெற்றுத்தர வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டு நிற்கின்றோம்.

அதேபோல் பிரித்தானியாவில் அம்பிகை அம்மா அவர்கள் தமிழர்களுக்கான நீதி வேண்டி உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார். அந்த நாட்டு அரசாங்கம் அவரின் கோரிக்கைகளைக் கவனத்திற் கொண்டு அவரின் கோடக்கைக்கான நீதியைப் பெற்றுக் கொடுத்து அவரின் அந்தப் போராட்டத்தினை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். அதே நேரம் அவருக்கு ஆதரவாக நாங்கள் தற்போது வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் எட்டு மாவட்டங்களிலும் இந்த சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தினை நடாத்தி வருகின்றோம். அதில் எமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் இணைந்து தங்கள் ஆதரவினை வழங்கிக்கொண்டு வருகின்றனர். இது தொடர்ச்சியாக நடைபெறப் போகின்றது. எனவே அனைத்து தமிழ்த் தேசியம் சார்ந்த, தமிழ் உணர்வுள்ள அனைவரும் இதற்கு ஆதரவினைத் தந்து வலுப்பெறச் செய்ய வேண்டும். எங்களது பிரச்சினையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்த வேண்டும் என்ற எங்கள் கோரிக்கை மீதான அழுத்தத்தை அனைத்து சர்வதேச நாடுகளுக்கும் கெடுக்கும் முகமாக இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றொம்.

எனவே சர்வதேச நாடுகள் எமது, பிரச்சினைகள், வலிகள், வேதனைகளை உணர வேண்டும். எமது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்று தெரியாமல் நாங்கள் அவதியுறுபவர்களாக, பல வேதனைகளுக்கு மத்தியில் கண்ணீருடன் தெருக்களில் இருக்கின்றோம். எங்களை இந்தப் போராட்டங்களில் இருந்து இல்லாமல் செய்வதற்கும், உளவியல் ரீதியான தாக்கத்தைத் தந்து எம்மை அழிப்பதற்குமான முயற்சியில் இலங்கை அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. இலங்கை அரசின் அச்சுறுத்தல்கள் எங்கள் மீது மாத்திரமல்லாமல் எமது குடும்ப ரீதியிலும் இடம்பெற்று வருகின்றன. எனவே எங்கள் விடயத்தைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்வத்கு இது சார்ந்து செயற்படும் அனைவரும் ஒன்றுகூடி எமக்கான ஆதரவினை நல்கி எமக்கான நீதியைப் பெற்றுத் தர வெண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம் என்று தெரிவித்தார்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டவிரோத மணல் ...

இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் புலிபாய்ந்தகல் பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதேச செயலக மண்டபத்தில் 04.03.2021 இக்கூட்டம் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் ராஜ்பாபு நெறிப்படுத்தலில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன்ஜ்ஜ் கோவிந்தன் கருணாகரன்ஜ்ஜ் வாழைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் சோபா ஜெயரன்ஜித் மற்றும் அரச அரசசார்பற்ற நிறுவனங்கள் திணைக்களின் தலைவர்கள் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் நடைபெறும் இப்பிரதேசத்திற்கான முதலாவது கூட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. இக்கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு ஆராயப்பட்டபோதிலும் மணல் அகழ்வினால் வயற்பகுதியிலுள்ள பாலங்கள் மற்றும் மதகுகள் உடைந்துவிழும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாய நிலங்கள் மற்றும் பாதைகள் தோண்டப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. இதையடுத்து மிகவும்மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையிலுள்ள பிரதேசங்களில் மணல் அகழ்வை உடனடியாக முழுமையாக நிறுத்தி மீள்பரிசீலனைக்குட்படுத்த இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.



SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...

மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598

Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch | Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை

தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+0966502126923

n.uthayakumar1981@gmail.com

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன் 0.62% தொடக்கம்
10% இல் சொந்த வீடு கட்ட அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள், விற்க, வாங்க, கட்ட, திருத்த

இலங்கைக்கு போக வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி

SRI JEWELLERY



Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலமனைத்தும்
பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா -வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

Aaran Ayurveda
& Wellness Massage



Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt




# யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படும்

## ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் காதர் மஸ்தான்

(வாஸ் கூஞ்ஞ)



யுத்தத்தால் பாதிப்படைந்தவர்களில் 2017 ஆம் ஆண்டுக்கு முன் சொத்து இழப்பீடுகளுக்காக விண்ணப்பித்தவர்களுக்கு இன்று இழப்பீட்டு துறை அலுவலகத்தால் இழப்பீடுகள் வழங்கப்படுகின்றபோதும் நான் மீள் குடியேற்ற புனர்வாழ்வு வடக்கு அபிவிருத்தி பிரதி அமைச்சராக இருந்தபொழுது வழங்கப்பட்டு விண்ணப்பித்தவர்களுக்கும் இழப்பீடுகள் வழங்க வேண்டிய கடற்பாடு எனக்கு உண்டு என வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் முல்லைத்தீவு மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான காதர் மஸ்தான் இவ்வாறு தெரிவித்தார்.

புதன்கிழமை மாலை மன்னார் மாவட்ட செயலகத்தில் இழப்பீட்டுக்கான துறை அலுவலகத்தினால் மன்னார் மாவட்டத்தைச் சார்ந்த 03 இந்து கோவில்கள் உட்பட 59 பேருக்கு யுத்தத்தினால் சொத்துக்கள் பாதிபடைந்த இழப்பீடுகளுக்கான காசோலைகள் வழங்கும் வைபவம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மன்னார் முல்லைத்தீவு மாவட்டங்களின் ஒருங்கமைப்புக் குழு இணைத்தலைவருமான காதர் மஸ்தான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு தொடர்ந்து தனது உரையில்;

நான் மீள் குடியேற்ற புனர்வாழ்வு வடக்கு அபிவிருத்தி பிரதி அமைச்சராக இருந்தபொழுது இந்த இழப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டும் என்ற முயற்சியில் அன்றே நான் கவனம் செலுத்தி வந்தேன்.

குறிப்பாக நான் சொல்ல வேண்டுமானால் அப்பொழுது சொத்து அழிவுகளுக்காக பெரும்பாலானோர் விண்ணப்பங்களை அனுப்பாமல் இருந்தனர். ஆலய தர்மகத்தாக்களும் அக்கறை காட்டாத நிலையில் காணப்பட்டனர்.

அப்பொழுது வட மாகாணத்துக்கு சுமார் 23 ஆயிரம் விண்ணப்பங்கள் நான் வழங்கியிருந்தேன். இந்த விண்ணப்பங்களுக்கான நஷ்டஈடாக இது இருக்காது. ஆனால் 2017 க்கு முதல் விண்ணப்பித்தவர்களே தற்பொழுது இவ் இழ்பீடுகளுக்கான தொகையை தற்பொழுது பெறுகின்றீர்கள்.

இன்னும் எத்தனையோ பேர் இவ் இழப்பீடுகளை பெறுவதற்கு காத்திருக்கின்றீர்கள். அரசுகள் மாறினாலும் இவ் இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும் என நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

தற்பொழுது இதற்கு பொறுப்பு வாய்ந்த அமைச்சாக நீதி அமைச்சு காணப்படுவதால் நாங்கள் இவ் அமைச்சுடன் பேசியிருந்தோம். இருந்தும் இவ் இழப்பீடுகள் கிடைக்குமா அல்லது கிடைக்காதா என்ற எதிர்பார்ப்புடன் இதில் விண்ணப்பித்திருந்தவர்கள் இருந்த வேளையில் ஏதோ தற்பொழுது கிடைப்பது ஒரு சிறிய ஆறுதலாக இருக்கலாம்.

இழந்தவைகள் பெருந் தொகையாக இருந்தாலும் கிடைப்பது சிறிய தொகையாக காணப்பட்டாலும் இவைகளை வழங்க வேண்டும் என எமது ஜனாதிபதி மற்றும் பிரதமர் மற்றும் துறை சார்ந்த அமைச்சர் அலிசப்ரி ஆகியோருக்கும் அத்துடன் இழப்பீட்டு துறை பணிப்பாளர் அதிகாரிகள் இவற்றை ஒழுங்கமைத்து கொடுத்த அரசாங்க அதிபர் அதிகாரிகள் யாவருக்கும் நான் நன்றி தெரிவித்து நிற்கின்றேன்.

என்னால் அன்று வழங்கப்பட்ட 23 ஆயிரம் விண்ணப்பங்களை பெற்றுக் கொண்டு விண்ணப்பித்தவர்களுக்கும் இவ் இழப்பீடுகளை வழங்க வேண்டிய கடற்பாடு எனக்கு இருக்கின்றது.

இந்த வருடம் இதற்கான நிதி ஒதுக்கீடு குறைவாக காணப்படுகின்றபோதும் எதிர்காலத்தில் தொடர்ச்சியாக இவ் இழப்பீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சிலர் விண்ணப்பித்த ஆவணங்களில் குறைபாடுகள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டு அவைகள் பூர்த்தி செய்து அனுப்பும்படியும் தெரிவிக்கப்பட்டிருப்பதால் இவர்களுக்கும் விரைவில் வழங்கப்படும் என தெரிவிக்கின்றேன்.

இவ் விடயத்தை மற்றவர்களுக்கும் நீங்கள் தெரிவித்து அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்ட வேண்டும் என கேட்டு நிற்கின்றேன் என இவ்வாறு தெரிவித்தார்.

# மட்டக்களப்பு நகரில் முகக்கவசம் அணியாத பலர் பொலிஸாரினால் கண்டுபிடிப்பு



(ரீ.எல்.ஜவ்பர்கான்)

மட்டக்களப்பு நகரிற்குள் முகக்கவசம் அணியாமல் நடமாடிய பலர் பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்து வரும் கொரோனாவைரஸ் தொற்று பரவல் நிலையில் தொற்றுநோயில் இருந்து பொது மக்களை பாதுகாக்கும் வகையில் சுகாதார அமைச்சு பணிப்புரைக்கு அமைய பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து முகக்கவசம் அணிவதை கயட்டாயப்படுத்தும் நடவடிக்கையினை மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுமக்கள் மத்தியில் முன்னெடுத்து வருகின்றனர் .

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஜி .ஏ .என் . லக்சிறி விஜேசேன பணிப்புரைக்கு அமைய மட்டக்களப்பு தலைமை பொலிஸ் நிலைய சிறு குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி சி .ஐ . விஜேவீர வழிகாட்டலின் கீழ் சிறு குற்றப்பிரிவு அதிகாரியும் பொதுமக்கள் தொடர்பாடல் பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஜி . உதயகுமார் தலைமையில் முகக்கவசம் அணிவதை கட்டாயப்படுத்தும் அறிவுறுத்தல் நடவடிக்கையினை இன்று மட்டக்களப்பு நகர் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது பொதுமக்கள் தொடர்பாடல் பொலிஸ் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் அன்புராஜ் ஆகியோருடனான பொலிஸ் உத்தியோகத்தர்களினால் முகக்கவசம் அணியாத பலர் அடையாளம் காணப்பட்டு அவர்களது விபரங்களும் பொலிசாரினால் சேகரிக்கப்பட்டதுடன் அற்வுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

# பதவிகள் என்பது கிறீடங்கள் அல்ல அது அமானிதமான பொறுப்பாகும்

## மேலதிக அரசாங்க அதிபர் சட்டத்தரணி அப்துல் லத்தீப்



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)



பதவிகள் என்பது எமக்கு கிடைத்த கிறீடங்கள் அல்ல அது இறைவனால் வழங்கப்பட்ட அமானிதமான பொறுப்பாகும். என அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீப் தெரிவித்தார்.

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் புதிய கணக்காளராக மருதமுனையை சேர்ந்த றிஸ்வி யஹ்சர் வியாழக்கிழமை தனது கடமையை பெறுப்பேற்றுக் கொண்டார். இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனை தெரிவித்தார்.

தொடர்ந்து எங்கு உரையாற்றும் போது,

மாற்றங்கள் நடைபெறும் போது நல்லுறவு ஏற்படுகிறது. நல்லுறவு என்பது மற்றவர்களுக்கு சேவை செய்ய கிடைக்கும் ஒரு வாய்ப்பாகும். இந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொண்டு மற்றவர்களின் மனங்களை வெல்ல வேண்டும்.

நாம் பதவிகளில் இருந்துவிட்டு மரணித்த பின்பும் எம்மைப்பற்றி நல்ல அபிப்ராயத்தை மக்கள் பேச வேண்டும். நாவிதன்வெளி பிரதேசம் பாதிக்கப்பட்ட மக்கள் அதிகளவில் வாழுகின்ற ஒரு பிரதேசமாகும். யுத்த சூழலில் அதிக இழப்புக்களை சந்தித்த ஒரு பிரதேசமாகும். இங்கு மக்களோடு மக்களாக இருந்து பணியாற்ற வேண்டியது அவசியமாகும் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ். ரங்கநாதன், உதவி பிரதேச செயலாளர் என். நவநீதராஜா, முன்னாள் கணக்காளர் யு.எல்.ஜவாஹிர், கல்முனை கல்வி வலயத்தின் கணக்காளர் வை.கபிபுல்லா, அம்பாறை பொலிஸ் திணைக்களத்தின் கணக்காளர் எம்.அமீன் உட்பட பிரதேச செயலகத்தில் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனையில் இளம் தொழில் முனைவோருக்கு அரச காணி வழங்கல் நேர்முகப்பரீட்சை



(றாசிக் நபாயிஸ், மருதமுனை)

ஜனாதிபதியின் இளம் தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பதற்காக அரசாங்க காணிகளில் முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொழில் முயற்சி ஆற்றல் தொடர்பாக பரீட்சிக்கும் நேர்முகப்பரீட்சை அம்பாறை மாவட்டத்தில் இடம் பெற்று வருகின்றது.

அந்த வகையில், கல்முனை பிரதேச செயலாளர் பிரிவில் தொழில் முயற்சி ஆற்றல் தொடர்பாக பரீட்சிக்கும் நேர்முகப்பரீட்சை செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.


பிரதேச செயலாளர் ஜே.லியக்கத் அலி தலைமையில் நடைபெற்ற நேர்முகப்பரீட்சையில் காணி உத்தியோகத்தர்களான ஏ.ஜெமீல், ஏ.எச்.எம்.ஹிபாயத்துல்லாஹ், காணி பயன்பாட்டு

அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எம்.ஜஹ்பர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எல்.றமீஸ், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.பி.ஏ.ஜெலீல் மற்றும் பட்டதாரி பயிலுனர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

கல்முனை பிரதேச செயலாளர் பிரிவில் 1,431 நபர்களுக்கு தொழில் முயற்சி ஆற்றல் தொடர்பாக பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சைக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் ஜே.லியக்கத் அலி தெரிவித்தார்.

# வேளாண்மை அறுவடைக்குப் பின்னர் ஒன்றுதிரண்ட நூற்றுக்கும் மேற்பட்ட யானைகள்

## கிராமத்திற்குள் புகுந்து விடுமோ என்று மக்கள் அச்சம்



(எச்.எம்.எம்.பர்ஸான்)

வேளாண்மை அறுவடைக்குப் பின்னர் யானை பட்டாளம் ஒரே இடத்தில் ஒன்று கூடியுள்ளதை காணமுடிந்தது.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட எரிக்கிலம் கட்டு பகுதியிலுள்ள வயல் பகுதியில் இவ்வாறு யானைகள் ஒன்று திரண்டுள்ளன.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட யானைகள் அவ்விடத்திலே சில நாட்களாக நிற்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் செய்யப்பட்ட வேளாண்மைகளை அண்மையில் யானைகள் துவம்சம் செய்து வந்த நிலையில் அதில் ஒரு யானை மின்சாரம் தாக்கியும் மற்றொரு யானை மர்மமான முறையிலும் இறந்துள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

குறித்த இடத்தில் ஒன்று திரண்டுள்ள யானைகளை பார்ப்பதற்கு பொது மக்கள் தினந்தோறும் வருகை தருவதாகவும் அதில் சிலர் கூக்குரலிட்டு யானைகளை மிரளச் செய்வதாகவும் அப் பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த யானைப் பட்டாளங்கள் குடியிருப்புப் பகுதிக்குள் உட்புகாமல் இருக்க சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி யானைகளை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்




( வாஸ் கூஞ்ஞ )

மன்னார் மாவட்டத்தின் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் இதன் இணைத் தலைவர்களான வட மாகாண ஆளுநர் திருமதி பி.எம்.சாள்ஸ் மற்றும் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டீமெல். வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், திலீபன். வட மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் உட்பட சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் பணிப்பாளர்கள் திணைக்கள உயர் அதிகாரிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இவ் கூட்டத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதிக்காக திட்டங்கள் பல சமர்பிக்கப்பட்டதுடன் கடந்த கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மீள் ஆய்வு செய்யப்பட்டன.

அத்துடன் கடற்தொழில் நீரியல் வளத்துறை, கல்வி, சுகாதாரம், ஆயள்வேதம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாடுகள், கூட்டுறவு அபிவிருத்தி, பனை அபிவிருத்தி, விவசாயம் போன்ற விடயங்கள் முக்கியமாக கலந்துரையாடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.




# மன்னார் கிராம அலுவலகரின் கொலை தொடர்பான சந்தேக நபர் தொடர்ந்து விளக்கமறியலில்

## இவரின் வங்கி கணக்குகளை பரிசோதிக்க மன்று அனுமதி



( வாஸ் கூஞ்ஞ )

மன்னார் கிராம அலுவலகரின் கொலை வழக்கில் சந்தேக நபருக்கு தொடர்ந்து விளக்கமறியல். சந்தேக நபரின் வங்கிக் கணக்குகளை பரிசோதனை செய்வதற்கு குற்ற புலணாய்வு பிரிவினர் மன்றில் விண்ணப்பம் சமர்பித்தனர்.

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் கிராம அலுவலகர்களுக்கான பதில் நிர்வாக உத்தியோகத்தராகவும் இலுப்பைக்கடவை கிராம அலுவலகராகவும் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில் எஸ்.விஜேயேந்திரன் (வயது 55) என்பவர் கடந்த ஆண்டு நவம்பர் 3 ஆம் திகதியன்று இரவு இவர் தனது கடமையை முடித்துக் கொண்டு தனது வீட்டுக்கு திரும்பி கொண்டிருந்தவேளையில் இனம் தெரியாத நபர்களால் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இவ் கொலை தொடர்பாக ஒருவர் சந்தேகத்தின் நிமித்தம் இலுப்பைக்கடவை பொலிசாரால் கைது செய்யப்பட்டு தற்பொழுது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் இவ் கொலை தொடர்பாக மேலும் துப்புத்துலங்கி மன்றுக்கு அறிக்கையிடுமாறு குற்றப்புலணாய்வு அதிகாரிகளிடம் இவ்வழக்கு ஒப்படைக்கப்பட்ட நிலையில் இவ் வழக்கு விசாரனை மீண்டும் புதன் கிழமை மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் விசாரனைக்கு எடுக்கப்பட்டது.

இவ் வழக்கு தொடர்பாக இலுப்பைக்கடவை பொலிசாரும். குற்ற புலணாய்வுத்துறை பொலிஸாரும் மன்றில் தோன்றி இருந்தனர். கொரோனா தொற்று நோய் காரணமாக சந்தேக நபர் மன்றில் சிறைசாலை அதிகாரிகளால் முன்னிலைப்படுத்தப்படவில்லை. பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தின் சார்பில் பா.டெனிஸ்வரனும் இவ் கொலை தொடர்பான சந்தேக நபர் சார்பாக செ.டினேஸ் மன்றில் தோன்றியிருந்தனர்.

குற்ற புலணாய்வினர் குறித்த இவ் வழக்கு தொடர்பாக மன்றில் தெரிவிக்கையில் இவ் வழக்கு தொடர்பாக மேலதிக விசாரனையை மேற்கொண்டு வருவதாகவும் சந்தேக நபரின் வங்கி கணக்குகளை பரிசோதிக்க வேண்டும் என்றும் விண்ணப்பம் செய்திருந்தனர்.

மேலும் இரசாயண பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்ட சில தடயப் பொருட்கள் தொடர்பான அறிக்கை இன்னும் கிடைக்கப் பெறவில்லை எனவும் குறிப்பாக இவ் கொரோனா தொற்றுக் காரணமாக இவ் அறிக்கைகள் கிடைப்பதற்கு காலதாமதம் ஏற்படுவதாகவும் மன்றில் குற்ற புலணாய்வு பொலிசாரால் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

இவ் வழக்கை எதிர்வரும் மார்ச் 17 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்படுவதாக தெரிவித்த நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜா சந்தேக நபரை தொடர்ந்து எதிர்வரும் மார்ச் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படியும் கட்டளை பிறப்பித்தார்.

# கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் 'கலைஞர் சுவதம்' விருது வழங்கி கௌரவிப்பு



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் அம்பாறை மாவட்ட செயலகம் மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்பன இணைந்து நடாத்திய 'கலைஞர் சுவதம்' விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் ரி.ஜெ.அதிசயராஜ் தலைமையில் வியாழக்கிழமை பிரதேச செயலக கூட்டம் மண்டபத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீப் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்த நிகழ்வில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் கீழ் மிக நீண்டகாலமாக கலைத்துறைக்கு அர்பணிப்புடன் பங்களிப்பு செய்துவருகின்ற பத்து (10) பல்துறை கலைஞர்களுக்கு 'கலைஞர் சுவதம்' விருது மற்றும் சான்றிதழ், பரிசு என்பன வழங்கி கௌவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வின் போது 2020 ஆண்டு தேசிய கல்வி நிறுவனம் தேசிய ரீதியாக நடாத்திய சிறுவர் ஓவியப் போட்டியில் 3 ஆம் இடத்தினை பெற்ற அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் அவர்களுடைய புதல்வி ஜெ.தக்ஷான்யா விசேட நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இதில் அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றிம்ஸான், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தயாஜினி, உட்பட கலாசார உத்தியோகத்தர் கே.பிரபாகரன் உட்பட் பலரும் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பு மாவட்ட அரச உத்தியோகத்தர்கள் அவுஸ்திரேலிய விருதுகள் உதவித்தொகை திட்டத்தினூடாக உயர்கல்வியை மேற்கொள்ளும் வாய்ப்பு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)




அவுஸ்திரேலிய விருதுகள் உதவித்தொகை திட்டத்தினூடாக அரச உத்தியோகத்தர்கள் இளங்கலை மற்றம் முதுகலை படிப்பினை அவுஸ்திரேலிய பல்களைக்கழகங்களில் மெற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.

அவுஸ்திரேலிய அரசாங்கம் வருடந்தோறும் வளர்முக நாடுகளிலுள்ள தனி நபர்களின் திறன்களையம், அறிவையும் மாற்றியமைக்க மற்றும் அவர்களின் சொந்த நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யவும் அவுஸ்திரேலிய விருதுகள் உதவித் தொகை திட்டத்தினூடாக சந்தர்ப்பமளித்துவருகின்றது.

இத்திட்டத்தினூடா அவுஸ்திரேலிய பல்கலைக் கழகங்களில் உயர்கல்வியினைத் தொடர ஆர்வமுள்ள மட்டக்களப்பு மாவட்ட அரச அதிகாரிகளுக்கு சந்தர்ப்பத்தினைப் பெற்றுக் கொடுக்கும் விழிப்பூட்டல் நிகழ்வு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர். திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந் தலைமையில் நேற்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது முதுகலை கல்வியினை அவுஸ்திரேலிய பல்கலைக் கழகங்களில் தொடர ஆர்வமுள்ள அரச அதிகாரிகளுக்கு, இப்புலமைப் பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பித்தல், தேவையான தகைமைகள் மற்றும் அதன் நன்மைகள் தொடர்பாக அவுஸ்திரேலிய விருதுகள் திட்டத்தின் இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கான பணிப்பாளர் டெல் கணகசபையினால் விளக்கமளிக்கப்பட்டது.

இப்புலமைப் பரிசில் திட்டத்தினூடாக உயர்கல்வியினைத் தொடர்வோருக்கு அவுஸ்திரேலிய அரசினால் இருவழி பயணம் உட்பட அனைத்து வசதிகளும் இலவசமாக வழங்கப்படுவதுடன் ஊக்குவிப்புத் தொகைகளும் வழங்கப்பட்டுவருகின்றன. மேலும் கடந்த ஆண்டு இத்திட்டத்தினூடா 30 இலங்கையர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# குச்சவெளியில் தனியார் காணிகளுக்குள் தொல்பொருள் பதாகைகள்




(ஹஸ்பர் ஏ ஹலீம்)

45 வருடங்களுக்கு மேலாக மக்களால் பராமரிக்கப்பட்டு வந்த குச்சவெளி ஜாயாநகர் சல்லிமுனை பகுதி குடியிருப்பு, தனியார் விவசாய காணிகள் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தால் தொல்பொருள் பகுதிக்கான அரச காணி என அடையாளமிடப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் அவர்களுக்கு மக்கள் முறையிட்டதை அடுத்து நேற்று முன்தினம் காலை அப்பகுதிக்கு விஜயம் செய்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடப்பட்டது.

பல வருட காலமாக மக்களுக்கு சொந்தமான காணியை தொள் பொருள் என்ற பேரில் அரச காணிகள் என சுவீகரிப்பு செய்ய முற்படுவது வேதனையளிப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். குறித்த காணி விடயம் தொடர்பில் தீர்க்கமான முடிவினை பெற்றுத்தருமாறும் மக்கள் உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றனர்.

# பெரிய கல்லாறு 'உறவுகள் உறங்கும்' இல்லத்தில் சிரமதான நிகழ்வு



(இ.சுதாகரன்)

பெரிய கல்லாற்றினைச் சேர்ந்த அமரர் சந்திரசேகரம் மனோன்மணி அவர்களின் ஞாபகார்த்தமாக 2015 முதல் இன்று வரைக்கும் இவ்வாறானதொரு மகத்தான சிரமதானப் பணியினை முன்னெடுத்துவரும் நிலையில் இவ்வாண்டிற்கான சிரமதான நிகழ்வு இன்றைய தினம் முன்னெடுக்கப்பட்டன.



பெரிய கல்லாறு உறவுகள் உறங்கும் இல்லத்தில் காலை 7 மணிமுதல் மாலை 5மணியளவில் சிரமதான நிகழ்வு முன்னெடுக்கப்பட்டதுடன் இல்லத்தில் நடப்பட்டிருக்கும் பூ மரங்களுக்கு நீர் பாச்சுவதற்காக அமைக்கப்பட்டிருந்த நீர்த்தாங்கி பெரிய கல்லாறு சர்வார்த்த சித்தி விநாயகர்ஆலய வண்ணக்கர் மூ.மமன்மதராஜாஅவர்களினால் திறந்து வைக்கப்பட்டதுடன் சிரம தான நிகழ்வில் பங்கேற்ற பணியாளர்களுக்கு ஊழிய நிதியும்,அரிசிப் பொதிகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இரணைதீவு விவகாரம் தமிழ், முஸ்லிம்களிடையே முரண்பாட்டை தோற்றுவிப்பதற்கான சூழ்ச்சியா?

## சந்தேகம் எழுப்புகிறது தென்கிழக்கு முஸ்லிம் பேரவை!

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸ ாக்களை அடக்கம் செய்வதற்கு இரணைதீவு தெரிவு செய்யப்பட்டு, அறிவிக்கப்பட்டிருப்பதானது தமிழ், முஸ்லிம் சமூகங்களிடையே முரண்பாட்டை தோற்றுவிப்பதற்கான திட்டமிட்ட சூழ்ச்சியா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என தென்கிழக்கு முஸ்லிம் பேரவை தெரிவித்துள்ளது.

இது விடயமாக பேரவை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸ ாக்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி தாருங்கள் என்று கிட்டத்தட்ட ஒரு வருட காலமாக எமது சமூகம் மன்றாடி வருகின்றது. உலக நாடுகள் அனைத்திலும் இவ்வாறான உடல்களை அடக்கம் செய்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ள போதிலும் இலங்கையில் மாத்திரம் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை வலுக்கட்டாயமாக தகனம் செய்து வருவதானது மிகவும் துன்பியல் நிகழ்வாகும்.

உலக சுகாதார ஸ்தாபனம், ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச மன்னிப்பு சபை என்று பல்வேறு சர்வதேச நிறுவனங்களும் உலக நாடுகள் பலவும் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கு அனுமதிக்குமாறு இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்தி வந்தபோதிலும் அதற்கு இனங்காமல், சுமார் முன்னூறுக்கு மேற்பட்ட முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தகனம் செய்யப்பட்ட பின்னர் ஜெனீவா மனித உரிமைகள் மாநாடு நடைபெறுகின்ற பின்னணியில் அடக்கம் செய்வதை அனுமதிக்கும் வகையில் திருத்தம் செய்யப்பட்ட வர்த்தமானி வெளியிடப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டு, ஒரு வாரம் கடக்கின்ற நிலையில் அடக்குவதற்கான இடங்களை அடையாளம் காண்பதில் காலம் வேண்டுமென்றே இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகின்றது. இந்நிலையில் இரணைதீவில் அடக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் அறிவித்திருப்பதானது முஸ்லிமகளிடையே அதிர்ச்சியையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியிருப்பதுடன் தமிழர்கள் மத்தியில் வெறுப்பையும் எதிர்ப்பையும் உருவாக்கியிருக்கிறது.

தமிழ் மக்கள் தனிப்பெரும்பான்மையாக வாழ்கின்ற இச்சிறிய தீவை முஸ்லிம்களின் ஜனாஸ ாக்களை அடக்கம் செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டிருப்பதன் மர்மம் என்ன? இவ்வாறே சிங்கள பிரதேசமொன்றை அரசாங்கம் தெரிவு செய்ய முற்படுமா? அதனை சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்வார்களா? நிச்சயமாக இல்லை.

தமது உறவுகளின் கொவிட் தொற்று ஜனாஸாக்களை தங்களது பிரதேசங்களிலேயே அடக்கம் செய்து கொள்கிறோம், அனுமதி தாருங்கள் என்று முஸ்லிம்கள் கேட்டுக்கொண்டிருக்கையில், ஏன் மாற்று சமூகத்தினரின் இடமொன்றை தெரிவு செய்து, தேவையற்ற முரண்பாடுகளை தோற்றுவிக்க வேண்டும். குறைந்த பட்சம் ஓர் இடமாயினும் அது முஸ்லிம்களை தனிப்பெரும்பான்மையாக கொண்ட பிரதேசமாக இருக்க வேண்டும் என்பதே எமது விருப்பமாகும். இதுவே ஏனைய சமூகத்தினரின் நலன்களுக்கும் பாதுகாப்பானது என அவர்கள் நம்புகின்றனர். அது மிகவும் நியாயமான எண்ணமாகும்.

முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் வலுக்கட்டாயமாக எரிக்கப்படுவது தொடர்பில் கவலை, கண்டனத்தை வெளியிட்டு, அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் எனக்குரல் எழுப்பி வந்த தமிழ் சமூகத்தினர், தமது போராட்டங்களில் ஓர் அம்சமாக வரிந்து கட்டிக்கொண்டு, ஜெனீவா வரை கொண்டு சென்றிருக்கின்றனர். இவ்வாறான பின்னணியில் சகோதர தமிழ் சமூகத்தினருக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் சிதைக்கும் வகையிலேயே இரணைதீவு விவகாரம் திட்டமிட்டு உருவாக்கப்பட்டிருக்கிறதா என்ற சந்தேகம் எழுந்திருக்கிறது.

எவ்வாறாயினும், கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்குவதற்கு மாவட்டம், மாகாணம் தோறும் பொருத்தமான முஸ்லிம் பகுதிகள் அடையாளப்படுத்தப்பட வேண்டும். தற்போதைய அவசர சூழலில் ஓர் இடமாயினும் அது முஸ்லிம்களை தனிப்பெரும்பான்மையாக கொண்ட பிரதேசமாக தெரிவு செய்யப்பட வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்- என்று தென்கிழக்கு முஸ்லிம் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கு இடையூறு!

கிண்ணியாவில் க.பொ.த.(சா/த) பரீட்சை எழுதுகின்ற முஸ்லீம் மாணவிகளுக்கு மண்டப மேற்பார்வேயாளர்களாலும் கண்காணிப்பாளர்களாலும் பல இடையூறுகளும் அசௌகரியங்களும் ஏற்படுத்தப் படுவதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மூதூர் தொகுதிக்கான கொள்கைப் பரப்புச் செயலாளரும்,கிண்ணியா நகர சபை உறுப்பினருமான எம். எம்.மஹ்தி ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் கூறுகையில் கிண்ணியா வலயத்தில் உள்ள முஸ்லீம் மகளீர் கல்லூரி, அல்ஹிரா மகா வித்தியாலயம், அரபா மகா வித்தியாலயம் போன்ற பரீட்சை மண்டபங்களில் பரீட்சை எழுதும் மாணவிகளுக்கே இவ்வாறான அசௌகரியங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளதாக தனக்கு மாணவிகளால் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளது என நகரசபை உறுப்பினர் கூறினார்.

பரீட்சார்த்திகளின் காதுகள் தெரிய வேண்டும் என்பதற்காக அவர்களுடைய ஹிஜாபை அகற்றி விட்டு பரீட்சையை எழுதுமாறு அழுத்தங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. இச்செயற்பாடு சிறு வயதிலிருந்து ஹிஜாபை அணிந்து பழக்கப்பட்ட மாணவிகளுக்கு பெரும் அசௌகரியத்தையும் மன உளைச்சலையும் ஏற்படுத்தியதோடு பரீட்சையை எழுத முடியாமல் அழுகின்ற நிலையையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் ஏற்படாதவாரு அனைத்து பரிசோதனைகளையும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்னர் செய்து கொள்ளுமாறும், பாடசாலை அதிபர்கள் அதற்கான வழி காட்டல்களை முன்னரே எடுத்துக்கூறி தயார்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

# குச்சவெளி காணி சம்மந்தமாக கிழக்கு ஆளுனருடன் பாராளுமன்ற உறுப்பினர் சந்தித்து கலந்துரையாடல்

**(எப்.முபாரக்)**



ஆளுனர் அலுவலகத்தினால் பெயர் பதாதைகள் போடப்பட்ட குச்சவெளி காணி பிரச்சினை சம்மந்தமாக நேற்றுகிழக்கு மாகாண ஆளுனர் அனுராத யகம்பத்துடன் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் ஆளுனர் அலுவலகத்தில் சந்தித்து இது தொடர்பாக உரையாடினார்.

பாராளுமன்ற உறுப்பினர் குச்சவெளி பகுதி மக்கள் எதிர்நோக்கின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆளுனரின் கவனத்திற்கு கொண்டு சென்றார்.

இரண்டு வாரங்களுக்குள் சம்மந்தப்பட்ட காணி உரிமையாளர்களையும் சந்தித்து இவை தொடர்பான பிரச்சினையை தீர்ப்பதற்கு இனக்கம் தெரிவித்துள்ளதாகவும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் தெரிவித்தார்.

# மருதமுனையில் 6 இலட்சம் ரூபா செலவில் முன்பள்ளி பாடசாலை கட்டிடம் திறந்து வைப்பு



**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

சிறுவர் மகளிர் அபிவிருத்தி அமைச்சின் சிறுவர் செயலகம் தற்போது முன்னெடுத்துள்ள முன்பள்ளி அபிவிருத்தி தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை பிரதேச செயலகத்தின் கீழுள்ள முன்பள்ளிப் பாடசாலைகள் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் ஆறு இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்ட மருதமுனை எம்.எஸ். சி முன்பள்ளி பாலர் பாடசாலையின் புதிய கட்டடம் நேற்று (04) திறந்து வைக்கப்பட்டது.

அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஆர்.எம். நபாயிஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி பிரதம அதிதியாக கலந்து கொண்டு பாடசாலையின் புதிய கட்டடத்தை திறந்து வைத்தார்.

முதல் கட்டமாக பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள 29 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாக சுமார் 12 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. ஒரு பாடசாலைக்கு 6 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் சுமார் 72 இலட்சம் ரூபாய் செலவில் இந்த முன்பள்ளி பாலர் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


இந்த நிகழ்வில் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எல்.சிபாயா, முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எச்.சம்றினா, சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.எம்.ஹாஸ்பியா, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.ஐ.பஜிமிலா, பொதுஜன பெரமுன கட்சியின் மருதமுனை செயற்பாட்டாளர் இஸட்.ஏ.நௌசாத் உட்பட பாடசாலை நிருவாக உறுப்பினர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின்போது பிரதம அதிதி அவர்களினால் பாடசாலையின் பெயர் பொறிக்கப்பட்ட கேக் வெட்டப்பட்டு சிறுவர்களுக்கு வழங்கப்பட்டதுடன் இனிப்புப் பண்டங்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வின் இறுதியில் பாடசாலை வளாகத்தில் அதிமேதகு ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு தேசிய வேலைத் திட்டத்திற்கு அமைய அதிதிகளினால் பழ மரக்கன்றும் நாட்டி வைக்கப்பட்டது.

நிகழ்வின் இறுதியில் பாடசாலை வளாகத்தில் அதிமேதகு ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு தேசிய வேலைத் திட்டத்திற்கு அமைய அதிதிகளினால் பழ மரக்கன்றும் நாட்டி வைக்கப்பட்டது.

# புளியூத்துகுள விவசாய நெற்செய்கை தொடர்பிலான தீர்மானக்கூட்டம்



**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட புளியூத்துக் குளத்தின் இவ்வருடம் சிறுபோக நெற்செய்கை தொடர்பில் தீர்மானம் எடுக்கும் கூட்டம் நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜே.ஸ்ரீபதி தலைமையில் நேற்று பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற குறித்த கூட்டத்தில் இம் முறை சிறுபோக நெற்செய்கை உரிய குளத்தின் நீரில் இருந்து சிறுபோக நெற்செய்கையினை மேற்கொள்வதற்கான இரு விவசாய சம்மேளனங்கள் கலந்து கொண்டனர் .

இரு சம்மேளனங்களில் இருந்தும் தலா 20 ஏக்கர் அளவில் நெற்செய்கை பண்ணவுள்ளதாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதில் ஜெயபுர ஜெயசிறி விவசாய சம்மேளனம், சிங்கபுர விவசாய சம்மேளனம் என இரு விவசாய சம்மேளனங்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

குறித்த கூட்டத்தில் கமநலசேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் திருமதி வருனி, இரானுவ உயரதிகாரிகள் மற்றும் விவசாய சம்மேளனங்களின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டார்கள்.